
பழமையின்
ரகசியம் !!!
இதழ் 1
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# பழமையின் ரகஸ்யம் !!!

## இதழ் 1

வெளியீடு :
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655
மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in

முதற்பதிப்பு : அகண்டானந்த யாத்திரை
ஜூலை - ஆகஸ்ட் 2015


பிரதிகள் : 300

அட்டைப் படம் : நயாகரா நீர்வீழ்ச்சி, கனடா

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


1. சரணாகதி ------------------------------------------------2
2. இறைவனால் எல்லாம் முடியும் ------------------------------7
3. வாழ்க்கை & சாதனை ------------------------------------16
4. வேதம் தெரியாமல் வேதாந்தம் பேசாதே ------------------21
5. உன்னைப் படைத்தது அவனுக்காக
   உலகைப் படைத்தது உனக்காக ------------------------24
6. சும்மா இரு --------------------------------------------27
7. குரு கடாக்ஷம் ------------------------------------30
8. தியானத்தின் பிரார்த்தனை -----------------------34
9. ஸ்ரீபாதமும் ஸ்ரீபாதுகையும் ----------------------42
10. இறை நம்பிக்கை -----------------------------------44
11. நாமாவின் ரகஸ்யம் ---------------------------------57
12. உன்னை மட்டும் விட்டுவாடாதே ------------------77
13. கேள்வி பதில் ---------------------------------------84



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால்; தர்மம் நிலைபெறும்."

ஸ்ரீ ஸத்குரு திருவடிதனை
நம்பினோர் கெடுவதில்லை!
தெய்வம் துணையிருக்கும்!
நேருக்கு நேர் தோன்றாத் துணையான
பக்த பாலகத் பகதி!
ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜய ராம்;
ௐ!!!

அகம் பிரம்மம் ஜகம் பிரம்மம்,
அகமே எல்லாம்!
ஜகம், பரமும், ஜீவர்களும்;
சிறிதும் இல்லை!!



உ

# சரணாகதி.


இங்கு கதவுகள் சார்த்தப்படுவதில்லை.

காரணம் :- கதவுகளில்லை.


வருபவரை "வா" என அழைப்பதும் இல்லை. போகிறவர்களை "ஏன்" போகிறீர்கள் என கேட்கப் போவதும் இல்லை.

காரணம் :- ஒருவனே/ஒன்றே/ என்பது ஸத்தியமாய் இருக்கும் போது, ஏன் வந்தாய் ஏன் போகிறாய்? எங்கு போகிறாய் என்ற கேள்விக்கு இடம் ஏது? எட்டுத்திசைகளும் இல்லாத பரத்தை/ கேட்பது யாரெவர்?

எப் போது வந்தாய்??



நான் / எனதுடன் செய்யும்
தர்மாவோ / பக்தியோ !!
புண்ணிய பாபத்தையே கொடு
க்கும். அது தர்மத்தைக் கொடா!
புண்ணியபாபம் சொர்க்க நரக
த்தையே கொடுக்கும். முக்தியை
அது கொடாது. நிஷ்காம்ய ய
பக்தியும் / நிஷ்காம்ய கர்மாவும்
முக்தியை கொடுக்கும். நான்
எனது நாசமாகவில்லையானால்
ஆசைகளும், எதிர் பார்ப்பும்,
நாசமாகாது. நான் & எனது &
ஆசை & எதிர்பார்ப்பு நாசமாக
வில்லையானால் பக்தியும் முக்தியும் இல்லை.




4

பக்திக்கோ? முக்திக்கோ?
பிராப்தி தேவையில்லை.
கர்மாவை விருத்தி பண்ணவும்
இன்ப துன்பமாக வாழவும் பிராப்தி
தேவை. பலபல ஜன்மாவில்
செய்த அனுப்பிரமான தர்மங்
களும் அந்த ஒரு ஜன்மாவில் ஒட்டு
மொத்தமாக கிடைத்தால் இச்
ஜன்மாவில் பக்தியோ முக்தியோ?
அவஸ்யம் உண்டு. புண்ணிய
பாபத்தால் அமைவதே பிராப்
தியென அறிக. அவை நான்
எனதுடன் கூடியதாகும்.
நான் எனது நாசமானால் அச்
ஜன்மாவிலேயே பக்தியும் முக்தியும்
நிச்சயம் உண்டு என அறிக.



நமக்கு வரும் துன்பம்! துயரம்! கஷ்டம்
கவலை! எல்லாம் நம் மனபலஹீனத்தால்
தான் வருகிறது என உணர்க.
மனம் திட உறுதிபெறுமானால்! இறை
குரு உணர்வு இருந்தால் மேலே கூறிய
தோஷ குணங்களும் நாசமாகும். அதே
நேரம் மனபல ஹீனம் மறைந்து. மனம் பலமாகி
திட அறிவாகிவிடும் என உணர்க.

காரணம் :- எல்லாம் நீயே என
ஸ்ரீ பகவானிடம் மனதை ஒப்படைத்துவிட்டு
மாயாதீதமாக மனதை தாம் ஏற்றுக்கொள்கிறது என அறிக.



6

மனக்கற்பனையே இந்த நாமரூப, ஜகஜீவ,
தோற்றங்களாகும். இந்த மனம் எல்லாம்
நீயே! என பாவனை பண்ணும் போது,
மனக் கற்பனை நாசமாகியே தீர வேண்டும்.
பாவனை என்பது உறுதி. கற்பனை என்பது மன
சலனம் (அசைவு ஆசை) ஆகும். இந்த அசைவு
நாமரூப கற்பனையிலும்; அதன் மீது
வைத்துள்ள திட நம்பிக்கையிலும்;
அதன் மீதுள்ள ராகத்துவேஷாதிகளிலும்;
(விருப்பு வெறுப்பிலும்) ஸ்ரீ பகவா
னுடைமையை தனதுடைமையாக கருது
வதிலும்; ஸ்ரீ பகவானின் இயக்கத்தை தன்
முயற்சி என கருதுவதாலும்; இந்த
அசைவும்! அதன் ஆசையும் உண்டாகிறது
என உறுதியாக அறிக.




# இறைவனால் எல்லாம் முடியும்

பக்தன் ஒருவன் இருந்தான். அவனுக்கு தெய்வாதீனமாக ஒரு மகன் இருந்தான். அம்மகன் கொடும் நோயால் அவஸ்தைப் பட்டான். அவன் பிழைக்க மாட்டான் என்று உறவினர் கருதினர். அது சமயம் ஓர் பெரியவர் அங்கு வந்தார். அவர் ஓர் மருந்து சொன்னார். இம்மருந்து பெறுவது மிகவும் கடினம் என்றும், ஆனாலும் இறை நம்பிக்கையினால் பெற முடியும் எனச் சொன்னார்.

அம்மருந்து.

1) பகல் பொழுதில் ரோஹிணி நட்சத்திரம் பொருந்தும் நாளாக இருக்க வேண்டும்.
2) அந்நாளில் பகல் 12 மணிக்கு மழை பெய்ய வேண்டும்.
3) அது சமயம் மண்டை ஓடு ஒன்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.



8

௪ அம் மண்டை ஓட்டில் இயற்கையாக மழை ஜலம் விழ வேண்டும்.

௫ அம் மழை ஜலத்தில் நல்ல பாம்பின் விஷம் இயல்பாக விழுந்து அதில் கலக்க வேண்டும்.
(பாம்பை பிடித்து விஷம் எடுக்கக் கூடாது.)

இப்படி நிலைகளில் பெறப்படும் ஜலத்தை இப்பையன் வாயில் விட்டால் அவன் பிழைத்துக் கொள்வான் என்றார். அந்த பெரியவர்.

அப்பக்தனும் ரோஹிணி நக்ஷத்திரம் என்றுள்ள பஞ்சாங்கத்தை பார்த்தான். அது நாளை என தெரிந்தது. மண்டை ஓட்டுக்காக சுடுகாடு சென்றான். அங்கு ஓர் மண்டை ஓட்டை எடுத்தான். இறைவனிடம் (கண்ணனிடம்) உருகி வேண்டினான்.



9

உருகி கண்ணீர் கொட்டி அழும் போது உள்ளம் பஞ்சுபோல் ஆகிவிடுகிறது. தூய்மையான உள்ளத்தில் இறைவன் வந்தே ஆகவேண்டும் விதியை மிஞ்சிய பலனை தந்து பாதுகாத்தே ஆகவேண்டும். அதனால் தான் பெரியோர் உருகி நம்பினோர் கெடுவதில்லை என்கிறார்கள்.

ஹே கண்ணா! ஓர் பெரியவராக வந்தாய். கிடைக்காத ஓர் மருந்தையும் சொன்னாய். உன் கருணையால் நடத்திடும் இன்று கூடியது. உன் கருணையால் மண்டை ஓடும் கிடைத்தது. உன் கருணையால் கருணைமழையும் பெய்ய வேண்டும் என உருகி வேண்டினேன். கருணைமழையும் அவன் கருணையால் பெய்தது. சுடு காட்டு மேட்டில் அம்மண்டை ஓட்டை வைத்தான். கண்ணன் கருணையால் அம்மண்டை ஓட்டில் பாதி அளவு ஜலம் நிறைந்து விட்டது. மழையும் நின்று விட்டது.

நல்ல பாம்புக்கும் அதன் விஷத்தை நீக்கும் எங்கு போவான்???

15




சாமான்யர்களுக்கு

# விதி வலியதே

என உணர்க.

ஹேகண்ணு! எல்லாம் உன் திருவிளையாடல். எப்படி திட்டம் போட்டு நடத்த வேண்டுமோ, அப்படி திட்டமிட்டு நடத்து உன் நாடகத்தை. உன்னையல்லால் இத்தினறுக்கு வேறு கதிரது பிரபோ! எனை உருகி வேண்டிக் கொண்டிருக்கையில், தவளை ஒன்று தத்தித் தத்தி அம்மண்டை ஓட்டின் சமீபமாக வந்தது. அது சமயம் எங்கிருந்தோ ஓர் சர்ப்பம் சீறி வந்து அத்தவளையை விழுங்கத் தணிந்தது. தவளை மேல் சீறிப்பாய்ந்தது சர்ப்பம். அத்தவளையும் மண்டை ஓட்டை ஒரு தாவுதலாக தாவி, அப்புறம் விழுந்தது. குறிதவறிய பாம்பும் சீறிவந்த வேகத்தில், விஷத்தைக் கக்கியது. அவ்விஷமும் (அவன் கருணையினால்) தெய்வாதீனமாக மண்டை ஓட்டின் ஜலத்தில் விழுந்து



11

## மனம் படைத்த மனிதன்

மன எண்ணத்தாலேயே புண்ணியபாவம் உண்டாகிறது. அப்புண்ணியபாவமே இவ்வுடல் ஆகும். ஆகவே மனம் படைத்தது தான் மனிதன். மன எண்ண சிருஷ்டியே மனிதன் ஆகும்.


கண்ணன் கருணையினால் கலந்து (ஜீவனும்! விஷமும்) இரண்டற்ற நிலை எய்தது. அதுவே மருந்தாக மாறி அப்பக்தனின் (மகன்) உயிரை காப்பாற்றியது.

இக்கதையின் உணர்வது.

1. முயற்சி மனம் படைத்த உன் வசம்.
2. அதன் பலன் உன் மன எண்ணமல்ல.
3. இயற்கையின்; அதாவது இறைவனின்; அதாவது நீதி (விதி) தேவனின்; வசமாகும்.
4. நீ எண்ணியபடி நடக்க வேண்டும் என்பது விதியல்ல.
5. நன்மையோ? தீமையோ? நடந்ததை ஏற்றுக் கொள்வதே உன் சாதனை.

(அதுவே விதி)

12



6 ஏது நடந்தாலும் இறைவன் கருணை
என்றால் சரணாகதி! இறை கருணை!
என்பதில் அர்த்தமே இல்லையே எனலாம்?

7 சரணாகதியினால் பெறும் இறை கருணை யனது,
பாகும்.

A இன்ப துன்ப இருமை மாறி ஆனந்தம் உன்

B பழைய வினை நாசமாகும். புதிய வினை தொடராது.

C பதமுக்தி அவஸ்யம் உண்டு. பர முக்தியானது
உன் வசுதியத்தின்படி நிறைவேறும்.

D இன்ப துன்பத்தை சமமாக ஏற்றுக்கொள்ளுதல்
மனம் அறிவாகும். அதுவே மேன்மையாக
மாறவும் வாய்ப்புண்டு. (உன் சாதனையால்)

E மனிதனாக பிறந்த நீ! செய்ய வேண்டியதை
செய்தவனாகிறாய்.


F இறை கருணையை பரிபூரணமாக பெற முடியும்.
அதனால் இறைக்காட்சியும் காலக்கிரமத்தில்
உன் சாதனையால் பெற முடியும்.



13

மாயாவினோத
நடத்திடும்
இவ்வுலக நாடக
மேடையில் ஒழுங்காக
நடந்தாலும், இந்த மனமானது,
அதை விபரீத விதமாக விசித்திர
காட்சிகளாக ஆக்கிக் கொண்டு புண்ணியபாவ
தாரதம்மியத்தை தம் கற்பனையால் உண்டாக்கி
விளையாடிக் கொண்டிருக்கிறது.

கண்ணால் காணக்கூடிய நாமரூபங்கள்!
எவர் எவராயினும், எவள் எவளாயினும்;
எது எதுவாயினும், எவை எவையாயினும்;
அவை நாம் காணும் நாமரூபங்களல்ல
வென்றும், பரிபூரணபரப்பிரம்மமானது
அந்தந்த நாமரூபங்களை தம் மாயாவினால்
தரித்துக்கொண்டு, வினைவிதி வசமென
காரண காரியத்தை ஏற்றுக் கொண்டு,
ஓர் மாயா நாடகத்தை, திட்டமிட்டதை
திட்டமிட்ட படியும், விகிதாச்சார நியதியில்,
பாரபட்ச தோஷமில்லாமல், நீதி
நேர்மை தவறாமல், ஒழுங்குடன்!
நாடகமுறைப்படி
நடைபெறுகிறதென உணர்க. இவ்வாறு
சந்தேக கலக்க பயமின்றி நீ உணர்ந்து
(டென்ஷன், எமோஷன்) விட்டால் இந்த
நாமரூப உலகம் ஆனந்தமயமாகி விடும்.






துன்பம், துயரம், கஷ்டம் நஷ்டம், கவலை பயம்
இவைகளுக்கு காரணம்; உன்னுடைய
(A) சந்தேக கலக்க பய மனமே காரணம்.

(B) இறை குரு உணர்வில்லாததே ,, .
(C) எல்லாம் நலமே என ஏற்காததே ,, .
(D) எதையெடுத்தாலும் சந்தேகமே ,, .
(E) இருமைகள் ஒழியாததே ,, .
(F) இறைநம்பிக்கையும் பூரணையும் இல்லாததே
(G) உன்னோட்டிய பொறுமை இல்லாததே குறை ,, .
(H) எதிர்பார்ப்பும் பேராசையுமே ,, .
(J) உள்முழு கவனமும் முற்கோபமுமே ,, .
(K) தன்கவனமின்மையும், போதமின்மை நிறைவில்லாததே ,, .
(L) நீ சாதனையிலிருந்து, நீ வாழவிரும்புவதே ,, .
மேலே கூறிய இந்த (பதினொன்றையும்) உன் அறிவு
கூர்ந்து உணர்ந்தால் நாமரூப மயக்கத்
திலிருந்து விடுபடலாம். இது ஸத்தியம்.



ந

நீ கண்ணால் காணக்கூடிய நாம ரூபங்கள்
அவை அம்மாவே இருக்கிறது.
உன்னை என்ன செய்கிறது??? அந்த
நான், என்னுடைய, எனதென, கற்பனை
செய்யும் உன் பிடிவாத குண மனமே உன்னை
இந்த பாடு படுத்துகிறது. சொந்த பந்த
உறவோடு வாழவேண்டும் என்ற உன்
வாழ்வின் மோகமே உன்னை இந்த பாடு
படுத்துகிறது. உன் கஷ்ட நஷ்டத்திற்கு
உன் மனம் தானே காரணம்? நான் எனது
விடாதது தானே காரணம்? எது வந்தால்
என்ன? எது போனால் என்ன? இன்ப துன்பம்
நிலையானதா? எல்லாம் ஒருவன் செயலே.
ஒருவன் பொருளே! எல்லாம் ஒருவனே!
அவனுக்கு கண்ணியம் யாரும் ஈடில்லையென்பதே
சத்தியம். அது தானே இருமையற்ற ஆனந்தம்.
அதற்கு முயற்சி செய். ஆனந்தம் நீயே ஆவாய்.




(16)

## வாழ்க்கை சாதனை!

(1)

வாழ்க்கை:- திட்டமிட்ட ஓர் நாடக காட்சி. அது அரங்கேற்றமாகி இந்த உலகமாகிய நாடகமேடையில் நடந்து கொண்டிருக்கிறது. அது முன்பே முடிவு செய்து எடுக்கப்பட்டமையால்; இனி மாற்றவோ? மறுக்கவோ? விலக்கவோ? சேர்க்கவோ? முடியாத ஒன்றாகிவிட்டதனை உணர்க. அக்காட்சிகளையும் / நிகழ்ச்சிகளையும் மனக்கண் கொண்டு பார்த்தால் விகார (தோஷம்) விவகார (பிரச்சனை) காட்சிகளாக தோற்றும்.



17

விசித்திர விநோத விபரீத பிரச்சனைகளைக் தோற்றும். மனம் அங்கு வேகமாக வளர்ச்சி அடையும். அது மனதிற்கு ஓர் கொண்டாட்டம் ஆகும். அங்கு வினை பின்னவிடும். புண்ணிய பாபம் போட்டியிடும்.


அது ஜனன மரண விருத்தியாகும். இதுவே இல்லாத வாழ்க்கை.

(2) சாதனை :- வாழ்க்கை என்னும் நாடகத்தை அதுயத்தப்பொய்என

உணர்வாய்


உணர்ந்தால் அறிவு ஆகும்

அங்கு காண்பதிலும்! கேட்பதிலும்!



18


அதிஜாக்ரதையாக இருந்துகொண்டு
சொல்லாலும் செயலாலும் நாம்
அடங்கி (கண்டதையும்!
கேட்டதையும் அப்படியே உண்மையென
நம்பிவிடாமல்) பிறரை அடக்காமல்!
எதையும் நலமென ஏற்றலே சாதனையாகும்.
வாழ்க்கை :- ஆசைகளை குறைக்காமலும்
நிறுத்தாமலும்; தேவைகளையும்
தேவையினால் பெருகும் ஆசைகளையும்
குறைத்து, குறைத்து, குறைத்து, நிறுத்தாமல்



19

விருத்தி செய்துகொண்டும், உறவு
சுற்றங்களில் வரும் ஆறுவிதகுணங்
களையும் விலக்கவும் விடவும்முடியாமல்;
சம்சார சேற்றுக்குள்ளேயே புதைந்து
கிடப்பது வாழ்க்கை ஆகும்.
இவை அரிப் பெருக்கின்ற படையை
சொரிந்து சொரிந்து ரணமாக்குவது
போலாகும்.
(இது வாழ்க்கைக்குமற்றோர் உதாரணமாகும்.)

கதையின் முடிவு.
ஓர் பக்தனிடமும் நாயிடமும் எந்த
எதிர்பார்ப்பும் இராது. கருபின மனம் இருக்கும்
வரை, தர்ம காரியங்களை எண்ணுவான்.
நடப்பவை! இதுவே நம் எண்ணமும்
இறைவன் தீர்ப்புமென ஆனந்தமாக ஏற்பான்.





அவனுக்கு வாழ்க்கை யென்பது:-
போராட்டமாக இராது.
சாதனையின் ஆனந்தமாக இருக்கும்.
இன்பதுன்பத்தில் அவன் பங்கேற்பதில்லை.
திட்டமிட்ட கர்ம காரியமாகவால் அதில்
அவன் பங்கேற்பதில்லை. திருப்தி அடைவான்.
எதிலும் உடைமை / உரிமை பாராட்டுவதில்லை.
கர்மகாரியங்கள் முடிந்து நிறைவுறுதலை
என ஆனந்தமாக ஏற்பான்.

இறை & குரு / உணர்வு

அவனிடம் பரிபூரணமாக இருக்கும்.





வேதம் தெரியாமல் வேதாந்தம் பேசாதே!

வேதம் தெரியாமல் வேதாந்தம் பேசாதே.

அதாவது?

ஸ்ரீ பகவான்! இன்னார்!

ஒவ்வொரு நாமரூபத்தின் உள்ளும்! (அந்தர்யாமியாய்) இருப்பது யார்? என உணராமலும்; நாம் யார்? ,, ;

வேதாந்தம் பேசாதே அது அபசாரமாகும்.

ஸ்ரீ பகவானின் இருப்பையும், அவன் ரூப லாவண்யத்தையும்; மஹிமை பிரபாவத்தையும்; இயக்கத்தையும் உணர்த்துவது வேதம் ஆகும்.



வேதமே ஸ்ரீபகவான்.
ஸ்ரீபகவானே வேதம். ௨௨
ஆகும். ஸ்ரீபகவானே
நாம். உபாதிபேதம் கடந்து நாம்
ஸ்ரீபகவானை உணர்ந்தால்
நாம் வேதம் உணர்ந்தவர்கள். அதுவே
ஸ்ரீபகவான் நாமங்களை உணர்ந்தவர். ஸ்ரீபகவானின்
அதாவது ஸ்ரீபகவானுக்கு உபமானமாகிய ... விட்டோமேயானால்
குணநிர்ணயங்களை ... இந்நிலை அறிந்து ... போதுமாம்.
வேதாந்தம்

அதாவது

பரமாத்மாவிலும், ஜீவாத்மாவிலும்
கல்பிதமாய் கல்பிக்கப் பட்ட
(கற்பனையால் சொல்லப்பட்ட)
"உபாதிபேதத்தை"
ஐயம் திரிபு அற விசாரித்து
நேதி செய்தவனே! அதாவது
பேதம் கடந்தவனே வேதாந்தம்
(சுவையை உணர்வது போல்) சொல்வதல்ல கேட்பதல்ல
உணர்வாம். படிப்பதல்ல
உணர்வதாகும்.
ஏன் கற்பனையாய் சொன்னார்கள் என்றால்?
ஸ்ரீபகவானுக்கு மதிப்பு மரியாதை
அந்தஸ்து, கௌரவம், கீர்த்தி கொடுத்து
கற்பனையாய் கொடுத்தார்கள்
அறியாமையின் ஜீவன் உய்வ்
டைய வேண்டும் என்ற தூய எண்ணத்தால் தான்.
(சுவையை வார்த்தையாலும், பரியாயத்தால் விளக்க முடியாது) என அறிக.



ஏன் வேதத்தை ஓத வேண்டும் என சொன்னார்கள் என்றால்? தைவ தாரை போல் வேதம் படித்தால் தான் கருத்துடன் வேதம் நம்முள் நிலவாயும். கருத்து நம்முள் நிலைத்து நின்று வேதம் (ஸ்ரீ பகவான்) தனியே இருக்கமாட்டான்.

வேதம் என்பது ஓர் கனி ஆகும்.
வேதாந்தம் (வேதத்தின் அந்தம்) அக்கனியின் சுவை ஆகும். கனியை சுவைத்து விட்டால் கனி மறைந்து விடும். சுவைதான் தோன்றும். அக்கனியின் சுவையை சுவைத்து விட்டால் தூக்கம் தான் வரும். அது ஹரி துயில் ஆகும். அதாவது அறிவின் செயலற்ற ஆனந்த உறக்கமாகும். அங்கு வேதாந்தமும் நமக்குள் மறைந்து விடும். வேதம் (ஸ்ரீ பகவான்) நமக்குள் ஆகும் வரை

வேதத்தின் அடிப்படையான சாஸ்திரமும் வேதமும் நமக்குள் நாமாக ஆகும் வரை

வேதம் ஓதுதல் நாம் விடலாகாது.

இங்கு சர்வார்ப்பணமே வேதம் என சொல்லப்படுகிறது. சர்வார்ப்பணம் சித்தித்து ஆனபின் வேதாந்த நாம் என ஆகிவிடலாம். அதாவது (வேதாந்தமே) பரமார்த்திகமே நாமாக இருப்போம்.




(1) உன்னைப் படைத்தது அவனுக்காக.
(2) உலகைப் ” உனக்காக.


(1) உன்னைப் படைத்தது அவனுக்காக :-

ஸ்ரீ பகவானைப் பணியவும் போற்றவும், அவன்
கல்யாண குணங்களை சர்வசதா ஸ்மரிக்கவும்;
அவனோடு உறவும், வரவும் வைக்கவும்;
அவன் நம் தந்தை. நாம் அவன் குழந்தை;
என்ற அன்பினால் அவனோடு இணையவும்;
முடிவில் அவனாகவே நாம் ஆகவும்;
நாமும் அவனும் இரண்டற கலந்த நிலையில்;
காலாதீதபரமேநாம் ஆகி. நாமே அதுவாகி;
இரண்டற்ற நிலையில், யாம்

யாமாகவே இருந்தோம்

என்றநம் அகண்டானந்த நிலையை பெறுவதற்கே இப்பூமிக்கு நாம் வந்தோம்.

உன்னைப் படைத்தது அவனுக்காக
உலகைப் படைத்தது உனக்காக




௨௫

௨ உலகைப் படைத்தது உனக்காக :

இங்குள்ள போகங்கள் இன்பதுன்பமாக
புசிக்க நாம் வரவில்லை அது உடலுக்காகவே
படைக்கப்பட்டதாகும். நான்! எனதற்று!
எல்லாம் நீயே! எல்லாம் உனதே! எனஉற்று;
இவ்வுலகில் விளையாடவே வந்தோம்.
வினை தேட நாம் வரவில்லை.
" இவ்வுலகம் நம்முடையதே அன்றி என்னுடையதல்ல.


நாமரூப பொருள்பற்றில் தான், திக்கு திசை
தெரியாமல் திகைத்து உழல்கின்றோம்.
நான்! எனதற்று ஆனந்தமாக விளையாடலாமே.
எல்லாம் பொம்மலாட்டமாக கண்டு ".
நாம்! நமது! என அவனோடு இணைந்து ".
விளையாட்டைப் போதும் போதுமென குறைத்துக்
குறைத்துக் குறைத்துக் குறைத்து நிறுத்தப் பழகலாமே!



26

இப்பொம்மைகள் எல்லாம் எதால் ஆனது?
என உள் உணர்வால் சற்று உணரலாமே!
எல்லாம் மண்ணே! என்றும்;
மண்ணே எல்லாம்! „ ;
மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே!
பரமாகிய யாமே! யாமாகிய பரமே!
என நன்மை தீமை; சுகம் துக்கம்;
இன்பம் துன்பம்; புண்ணியம் பாவம்; என்ற
இருமையற்று! ஜீவ நிலையில்
ஆனந்தம் என ஒன்றாகி, ஈச நிலையில்
பேரானந்தம் „ „ ; பரமார்த்த நிலையில்
பிரம்மானந்தம் „ „ முடிந்த முடிவில்
அகண்டானந்த நிலையில்
யாம் இருக்கிறோம்! என்று நிலைபெறலாமே
(யாம் → யாமாகவே)

27



# சும்மா இரு.

சும்மா இரு என்றால் உடலால்
சும்மா இரு :– சும்மா செய்யாமல். ஆடாமல்
எந்த கர்மாவும் செய்யாமல் இருக்கச் சொல்லவில்லை.
அசையாமல் இருக்க சும்மா இருக்க வேண்டும்
மனம் அசைவற்று சும்மா இருக்க வேண்டும் அதாவது
மௌனமாக வேண்டும். மௌனமாகவிருக்க வேண்டும்.
" குணதோஷம்பற்று, விருப்பு
" ஆசையற்று தேவையற்று,
" வெறுப்பற்று, சொந்தபந்த
உறவற்று, சகித்தலோடு சும்மா
சுகமாக இருக்க வேண்டும். இது எப்படி
சாத்தியமாகும் என கேள்வி எழலாம்?
எல்லாம் இறைவன் யாருள் அவன் செயல்
இது சாத்தியமாகும்
என்பது சத்தியமால்!
நான் எனதென்பது அறியாமையின் மயக்கம் தானே!
அந்த மயக்கம் நீங்கத்தானே! நீக்கத்தானே!




28

சும்மா இருக்கத்தானே இவ்வுலகிற்கு நீ வந்தாய். உன் கர்ம காரியங்கள் நடைபெறுதே என நினைக்கிறாயா? உன் தாவ கர்ம காரியங்கள் உன் தலைவிதி ஆகும். நீ எண்ணினாலும், எண்ணாவிட்டாலும்; நீ முயன்றாலும், முயலாவிட்டாலும்; அவை நடந்தே தீரும். நடந்தே ஆகவேண்டும். அது வேதன் நீதிதேவன் காரியமாகும். எல்லாம் நீயே என அவனை முழுமையாக நம்பி வைராக்கியமுடன் சரண் புகுந்தால் நீ சும்மா இருக்கலாம். அவன் பார்த்துப்பான்.





அவன் பார்த்துப்பான்; — உன் கர்ம
காரியங்கள் உன் வினை & விதிப்படி
நடக்கும் போது, சுற்றுமுறை சிரமம்
தூர உபாதைகள் ஏற்பட்டாலும்;
அமைதியாக, நீ ஏற்றுக
அதை சாந்தியாக
எல்லாம் நலமென்று உறுதி
எல்லாம் நலமாகவே மாறிவிடும்.
பூண்டால் எல்லாம் நலமாக
கொண்டும் மனை பக்குவத்தையும் அவ்வியம்
சாயா தெய்யம்.
அல்லது சுற்றுச்சூழ்நிலைகள் சுற்றுமாற்றி
தவறாக
அமைக்கும் காரியத்தை மாயா செய்யும்.
உன் சந்தேக கலக்கமே ஏன் எதிரி.
உன் திடமனமாகிய உணர்வே உன் நண்பன்.
இது இந்த வைத்தியத்தின் சுய அனுபவம்
ஆகும்.



# குருகடாக்ஷம்

குரு கடாக்ஷமாகிய குருகிருபை!
எப்படி கிடைக்கும் என்றால் ஓர் மனித
ஜீவனுக்கு முதலில் மோக்ஷ இச்சை!
இருக்க வேண்டும். அதாவது சாதனை
என்ற வார்த்தையை போட்டு உங்கள் வாழ்க்கை
சோதிக்க வேண்டாம். உங்கள் வாழ்க்கையாக போடுகிறோம்.
யையே இங்கும் வாழ்க்கையாக
முதலில் சொந்த பந்த பாச பற்றின்
உறவு தொழிலுக்காக நாம் இவ்வுலகில்
மனித ஜன்மாவாக பிறக்கவில்லை
உறுதி நிச்சயமாக தெரிந்து கொள்ள
வேண்டும். இவ்வுலகையும், நாமரூப
பொருள்களையும், மற்றும் போக பொருள்
களையும் நமக்காகவே இறைவன் படைத்தான்
அவனை நினைத்து அதற்காகவாவது ஓர் நன்றியாவது
சொல்ல வேண்டாமா?



நான் & எனது என ஒன்புசிக்க வேண்டும்?
நீ & உனது எனபுசிக்கவாயே. அதன்
அர்த்தம் என்ன வென்றால்?
நான் / என்னுடையனது மாற்றி
நாம் & நம்முடையது என இருமை
ஆக்கி, அதை ஓம்காரமாக்கி நம் இறைவனையும்
நம்மோடு இணைத்து நிலையில்;
நம் வாக்கும் & செயலும்! வரும் நிலையில்;
நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்?
அது சாதனை தான். ஆனால்
வாழ்க்கை / என்னும் வைத்துக் கொள்ளவாம்.
நான் :- அஹங்காரம். நாம் இறைவனை இணைக்கும் நிலை



௩௨

உன் வாழ்க்கை
மாறி விடும்.
காரணம்:—
வாக்கும் செயலுமே கர்மா
வாக இருப்பதால் உன்
வாழ்க்கை பிரணவமும் ஏற்றுக்
கொள்ளும். உன் செயல் மாயா
ஏற்றுக்கொள்ளும். நீ சுதந்திரமாக இருக்கலாம்

பிரணவத்தோடும்
இப்படி இறைவனோடும்! போது
பிணைத்துக் கொள்ளும்
உன்னை (உன் வாழ்க்கையை)
உன் வாழ்க்கையே மாறிவிடும். இது சத்தியம்.
உன் சாவும்! செய்வியும் கண்டு; அதாவது
நாம்! எமது! என்பதும்; வந்தோம், இருந்தோம்,
கொடுத்தோம்! வாங்கினோம்! பார்த்தோம்!
என்ற வார்த்தையில் இருமை தோற்றுவதைக்
கண்டுமிரண்டும்; அதில் ஓம் இருப்பதை
உணராமல்; இருக்குதலில் ஏதோ கோளாறு என
உறவு, சுற்றம், நட்பு
பயந்து மிரண்டு ஓடி விடுவர். அப்பக்குவியாக இருந்தால்
பக்குவியாக இருந்தால் பின் தொடர்வண்ணமே
உன்னோடு ஓட்டுவர். உன் வாழ்க்கையை வாழ்க்
கையாகவே வாழ்ந்து கொண்டு சாதனையின்
முதிர்ச்சி பெறலாமே!!!



33

(குரு) கடாக்ஷம் என்பது, பூரண கடாக்ஷமாகும்.
ஸத்குருவின் பரிபூரண கடாக்ஷம்

அப்படி உன் வாழ்க்கையை, வாழ்க்கையாகவே
வாழ்ந்து கொண்டு சாதனை செய்தால் உன்
லக்ஷியம் எதுவோ? பதமுக்தியா?
பரமுக்தியா என்பதை அவன்மாயா! கண்
காணைத்து தகுந்த குருவாய் வரும். அவ்வது
தகுந்த குருவை காட்டும். உன் சாதனை
எல்லாம் நான்! எனது! என்ற அறைந்
தார மமகாரங்களை சர்வ நாசம் செய்து
ஒன்றியமையமாகவே ஆகும்.
ஓம் காரத்தோடு
உன் வாழ்க்கையில் உண்மை & உரிமை! பாராட்டு வந்தை
சர்வநாசம் செய். இருப்பதை, கிடைப்பதை, கொண்டு
நடையனும் சகல கர்ம காரியம் களையும்
ஆனந்த டாண்டு காவமாக அனுபவிக்கத்து
எல்லாம் போதும் சாமி! போதும் என்ற ஆமனை திருப்தி
கொள். ஸ்ரீகுரு கடாக்ஷம் தானே உன்னை தேடி வரும்.




## வைத்தியத்தின் ஸ்வய அனுபவம்.

### தியானத்தின் பிரார்த்தனை!

ஹே பரமாத்மா! கருணைகடலே!
கிருபாஸாகரமே! காருண்ய
மூர்த்தி! பக்தவத்ஸலா! பதித
பாவனா! பரமதயாளா! பரம்
கிருபாநிதே! பக்தோத்தாரா!
பரமபாவனா! பக்தர்க்கனுகூலா!
பரமபுருஷா! பரமானந்தா!
ஹேப்ரபோ! ஹேப்ரபோ! ஹேப்ரபோ!!!

அடியோம் முறையிடுவது உன்
செவியில் விழவில்லையா? நீ
இல்லாத இடமேது? நீ அறியாத பொ
ருளேது? உன்னையல்லால் வேறெமக்கு
கதியேது?




மனதால் படும் தொல்லை தாள
முடியவில்லை பிரபோ? ஒருவினாடி
யேனும் சும்மா இருக்க முடியவில்லையே
பிரபோ?

நடந்து முடிந்த சம்பவங்களை திரும்ப திரும்ப
படம் போட்டு காட்டியும், அவ்வார்த்தைகளை
திரும்ப திரும்ப ஒலிக்கச் செய்தும்; தொடர்
கதைபோல் ஒளிச் ஒலியாக ஒளிரச்
செய்தும், எம்மை படாதபாடு படுத்துகிறதே
ஐயனே? யாம் என்னதான் முயற்சி
செய்தாலும் ஒரு பயனும் இல்லையே ஐயனே?

மனக்குறையை மனதிடமே சொல்லி என்ன
பயன் ஐயா??? ஆனாலும் நீயும் செயலற்றவனே
உன்மாயாவின் மகன் தானே இந்த மனம்!!!
மாயாவால் தன் மனதை நோக்க முடியுமோ ஐயா!



உன் சூழ்ச்சிதானே: 36

உன் வாக்கு:- யாவும் வேண்டுமா? நாம ரூபம் என கேட்கிறாய்? "நீ தான் வேண்டுமென கேட்டாலும் நாமரூப மயக்கத்தை உண் பண்ணுவது உன் மாயாவும், மனமும் தானே? ஐயா


ஓர் நிலையில் ஜகந் நாம ரூபங்களும்! அதை உண்டாக்கிய மாயாவும்! மாயாவின் மக்களை மனமும்! உன்னை யல்லால் வேறு எங்கிருந்து வந்தார்கள்?

அவர்கள் எப்படி செயல்பட முடியும் ஐயா?

உலகம் என இல்லாத ஒன்றை இருப்புடையது போல் காட்டி, இச் ஜீவர்களை மயங்கச் செய்வது

## உன் சூழ்ச்சிதானே ஐயா?

நாமரூபத்தில் இனிமை கொண்டவர்களை மயங்கச் செய்வது சரிதான். அவர்கள் உன் மாயாவின் ஆட்டில் பிரியம் உடையவர்களாகும்.





அடியோமும் கோடானு கோடி
ஜன்மா எடுத்து எடுத்து, விளையாடி
விளையாடி, அலுத்துப் போனேம் ஐயா???

மற்றோர் நிலையில்
போதுமய்யா இந்த மாயா ஜாலவிளையாடு.
படைத்தவனிடம் தானே (இந்த மனதை) விட முடியும்.

நம் இருவரைத் தவிர இவ்வுலகு
எவர் உண்டு? எது உண்டு? ஐயா

மற்றவர் எல்லாம் நம் அம்சமாக இருந்தாலும்,
மாயா அமைவில் விளையாட்டில் சிக்கி இருக்கிறார்கள்.

உன் அளப்பரிய கருணையினால், எமக்கு மட்டும்
இம்மாயா விளையாட்டு போதும் என நினைவு தந்தாய்.
அது பூரண நிறைவு பெறுவதும் உன் செயல் தானே
ஐயா???




38

நீயே பாராமுகமாக இருந்தால்; எவரிடம்
முறையிடுவோம்? எவரிடம் சொல்ல முடியும்?

ஹே பரமாத்மா பரந்தாமா!
எல்லாமாய்! ஏகமாய்! எங்குமாய்!
இருப்பவனே! ஒவ்வொரு ஜீவ ஹ்ரு
த்தின் உள்ளும், புறமும்!
சர்வ அந்தர்யாமியாய்! சின்மய ஜோதியாய்!
ஒளிந்திருந்தாலும், பார்க்கும் நிலையில்
இருந்து பார்த்தால் பார்க்கப் படுபவனே!!!

கூப்பிட்ட அழுது அவர் கூப்பிட்ட குரலுக்கு
ஓடி வருபவனே!!!
அபய ஹஸ்தத்தால் அரவணைப்பவனே!!!



39

மன இடருக்கிடையில் அகப்பட்டு
தத்தளிக்கும் (பரிதவிக்கும்) வேளையில் ஐயா!
என அலறி அழைக்கும் விதத்தில்
அழைத்தால் அக்கணமே வருபவனே! அன்னையாய்

அன்பாய் தந்தையாய் அறிவாய்
ஆசானாய் பேரறிவாய் தெய்வமாய்
பரமாத்மஸ்வரூபனாய் சேவைக்கு நண்பனாய்
அனைத்து ஜீவ வேஷம் போட்டுக்கொண்டும்
ஆங்காங்கு அவ்வப்போது! வந்தாட்கொள்ளும் எம் ஐயனே!



40

சேவகனுக்கும் சேவகனாய்!!
சேவையே உன் பணியாம்
தொண்டனாம் அண்ணலே! மஹேஇடர்
பாதுகளின் தீர்ந்தெறிவாய் எம் ப்ரபோ!!! உன்னை
அவனை அழைக்கிறேம். இச்சுஷணமே வா.
இங்கே வா!! இப்போதே வா! தாமதிக்கிலையே
ஐயா!!!
ஏன உள்ளம் உருகி கண்ணீர் அருவி பெருகி
அழைக்கும் உள் ருக்க ப்ரார்த்தனைக்கு அவன்
நாநாமரூபத்திலாவது! ஒலி ஒளிவடிவிலாவது
அசரீரி
அவஸ்யம் வருவான் இது ஸத்தியம், ஸத்தியம், ஸத்தியம்.
மஹேஇடர் பாதுகளின் சிக்கல்கள் அறுபடுமே.
இது இந்த ஏழையின் அனுபவம்
இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே.

ஸ்ரீ பாபா.



அழுதால் (41)
உன்னைப் பெறலாம்.
அவன் குறையையும்
பெறலாம். மேலும்,
அழுதால் அதுவும் ஆகலாம்.

சென்ற இதழின் தொடர்ச்சி

ஸ்ரீ பகவானை நோக்கி அவனை வேண்டி,
அவன் அருளை வேண்டி, மனம்!
உருகி கண்ணீர் கசிந்து ஓட அழும் போது

(1) கல்மனம் பஞ்சு போன்று ஆகிவிடுகிறது.

(2) வினைகள் பக்குவப்படுகிறது.

(3) பிராரப்தம் வலு இழக்கிறது.

(4) தற்காலிகமாக அனுபவிக்கும் வினைக்கு (மாயா)
மாற்றவோ! சற்று விலக்கவோ! இறை அருள்
[illegible]
சாத்தியமாகிறது.

(5) இறை வைப்ரேஷன் உக்கு அணு அணுவாக,
க்கு " "
கு " "
கூடுகிறது.

(6) இவ்வைந்தினையும் இன்ப துன்ப இருமை
ஒருமையாகி
மாற்றி ஆனந்தம் அணு அணுவாக கூடுகிறது.


"உருக்க கண்ணீர் பெருக்கத்திற்கு" (இவ்வளவு
வலிமை உண்டு
என அறிக.

(இவ்விதழ் நிறைவு பெறுகிறது) — ஸ்ரீ பாபா.
[illegible]



# ஸ்ரீபாதமும், ஸ்ரீ பாதுகையும்

குழந்தைகளே, ஸ்ரீபாதம் என்றால் ஸ்ரீபகவான்
ஆகும். திருவடி என்றால் அதாவது பாதுகை
ஸ்ரீ ஸத்குரு ஆகும். இதை நன்றாக கவனிக்கவும்.
என்றால்
கரண்டைக் காலின் மேல் சிரசு வரையில்
உள்ள உடல், மனம் வசம் அகப்பட்ட
மனிதனை வான்ரா அறிக. இம் மனம் படைத்த
மனிதனை சுமப்பதும், அவனுடைய கர்மகாரியங்கள்
செய்து முடிப்பதும், ஸ்ரீபாதம் என்ற ஸ்ரீ பகவானாகும்.
(பகவானின்)
திருவடி என்ற ஸ்ரீ ஸத்குரு ஸ்ரீபாதத்தை (ஸ்ரீபகவானை)
தாங்கக்கூடியவராகவும், ஸ்ரீபாதம் பின்
னப்படாமல் இருப்பதற்கு (பாதுகாக்க) உபகாரமாகவும்
இருக்கிறார். இயங்குவது ஸ்ரீபாதம் என்ற (தா)
ஸ்ரீ பகவானாகும். இயக்கத்திற்கு ஆதாரமாகக் (யாத)
இருப்பது ஸ்ரீ ஸத்குரு என்ற திருவடி ஆகும்.




முழங்காலுக்கு மேல், உள்ள உடல் புண்ணியமாய
சம்பந்தம் கொண்டதாகும். அப்புண்ணியமாயத்தை
ஸ்ரீபாதமே (ஸ்ரீபகவானே) தம் மாயாவினைல்
சுமந்து சென்று, "கர்ம காரியங்கள்" எக்குறையும்
இல்லாமல் சீராக செய்து முடிக்கிறார் என உணர்க.
ஆனால் திருவடி இல்லாமல் கர்ம காரியங்களை
சிறப்பாக செய்து முடிப்பது சற்று சிரமமே.
இவ்விருவரும் / இல்லாமல் கைகளினாலோ,
மற்றும் உறுப்புகளினாலோ, செயல்பட முடியாது.
அதாவது "வினை விதி" முடியாது என அறிக.
ஆகவே ஸ்ரீமஹான்களின் அனுபவ வாக்கு
எப்படி இருக்கிறதென்றால்; ஸ்ரீபாதுகையே
(திருவடியே) ஸ்ரீபாதத்தை (ஸ்ரீபகவானை) தாங்குவதால்
ஸ்ரீபாதசேவையைவிட, ஸ்ரீதிருவடி (பாதுகா) சேவையே முதல்
இடம் பெறும் என இதை நிறைவு செய்கிறார்கள்.



# இறை நம்பிக்கை!

ஸ்ரீபகவந் நாமாவில் எந்த நாமாவேனும் ஒருவன் தெரிந்தோ? தெரியாமலோ? அறிந்தோ? அறியாமலோ? புகழ்ந்தோ இகழ்ந்தோ? கூறுவானாயின் அவன் "சொர்க்க கதியை அடைவான் என்பதே ஸ்ரீமஹான்களின் வாக்கு.

ஸ்ரீராமாயண காவத்தில் உதாரணம்:- ஸ்ரீராமராவண யுத்தம் பண்ணும் போது வானர சேனைகள் எல்லாம் ராவணனைக் கொல்லவேண்டும்! ராவணனைக் கொல்ல வேண்டும் என சொல்லியே போரிட்டதாம். எல்லா வானர சைன்யங்களும் அதில் மாண்டு நரகம் சேர்ந்ததாம். அதேபோல் அசுர சேனைகள் எல்லாம் ராமனைக் கொல்ல வேண்டும். ராமனைக் கொல்லவேண்டும் என சொல்லியே போரிட்டதாம். அதில் மாண்ட அசுர சைன்யங்கள் சொர்க்கம் அடைந்தார்களாம்.



45

செய்கை முக்கியமல்ல. "எண்ணமும், வாக்கும்தான்" முக்கிய இடம் பெறுகிறது. உடல் ஜடம்தானே? அது என்ன செய்யும்? எண்ணமும் அதை சார்ந்த சொல்லும் எப்படி இருக்கிறதோ அதுவே கர்மா ஆகும் என உணர்க. உதாரணம்:—

ஓர் நாஸ்திகன் ஓர் மலைச்சாரலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவன் இறை நம்பிக்கை "இல்லாதவன்!"

அவன் புலம்பிக் கொண்டே சென்றான். அவன் புலம்பல் :- கடவுளே இல்லை. அப்படி இருந்தாலும் கருணை இல்லாத கல்நெஞ்சன். ஈவு இரக்கம்! பரிவு பாசம் [illegible]! கருணை காருண்யம் இல்லாதவன் அவனை நம்புவதைவிட ஒரு முழ கயிற்றை நம்பலாம்.[18]

கடவுள் ஓர் கொடும்பாவி! எனக்கு கடவுள் நம்பிக்கை என்பது அணுவளவும் கிடையாது. ஏனென்றால்?



இறைவா! கடவுளே! (46)
தெய்வமே! பகவானே!
என பிரம்மத்தவர்
நாமரூபத்தைத (முருகா! விநா
யகா! ராமா! கிருஷ்ணா என்று)
அழைக்காமல் மேலே சொன்ன பரசொரூபத்தை
அழைத்தாலும் சொன்னாலும்

கடவுள் என ஒருவன் இருந்தால்? ரயில் பிரயாணத்தில் ரயில் கவிழ்ந்து 100 பேர் பலி. 200 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி. விமானவிபத்தில் அதில் பயணம் செய்த 600 பேரும் கருகி மாண்டனர்.

லாரியும் காரும் மோதியதில் லாரி டிரைவர் பலி. காரில் உள்ள 6 பேர் இருகுழந்தைகள் உட்பட அனைவரும் பலி. அக்குழந்தைகள் விபரம் அறியா சிசு. அவைகள் என்ன பாவம் செய்தன? இப்படியே 1000 கணக்கில் பலி ஆகின்றனர். பூகம்பம், நிலச்சரிவு, வெள்ளம் இப்படியே பல ஆயிரக்கணக்கில் பலி ஆகின்றனர். இவைகளெல்லாம் கடவுள் இருந்தால் பார்த்துக் (சும்மா) கொண்டிருப்பாரா???

கடவுளுக்கு ஏன் இரக்கமே கிடையாதா?

ஆகவே கடவுளை யாரும் நம்ப வேண்டாம் என



47

பலன் உண்டு.
அங்கு இயற்கை
வடிவத்தில் அது
ஏதேனும் ஓர் நிலையில்
அவசியம் நடக்கிக்கும்.
இறைவனை தூற்றிக்கொண்டே அந்த
பலகாலம்
ஓர் நாள்! ஒரு தடவை! அனைத்தாலும்
இன்னமும் பலவிதமாக புலம்பிக்கொண்டே
சென்றவன் மேலச்சரிவில் சென்றுகொண்டிருந்தான்
கீழே அதலபாதாளம் கால் சறுக்கியது.
பள்ளத்தில் விழுந்தான். பள்ளத்தில் விழுந்தவன்
அலறினான்:— நான் சாகப்போகிறேனே?
கடவுள் என ஒருவன் இருந்தால்;
என்னை காப்பாற்றட்டும் என அலறினான்.
அவன்
கிடுகிடுபள்ளத்தில் விழுந்தவன் கை ஓர்
காட்டுக்கொடி சிக்கியது. உடனே அறியாமை காலேல்
அவன் சொன்னான்:— கடவுள் என்னை
காப்பாற்றவில்லை! நானே! ஓர் காட்டுக்கொடியை
பற்றிக் கொண்டேன். என் மடத்தனைவ்



அவஸ்யம் உன் அறியாமையை மறந்து, மன்னித்து ஏதேனும் ஒரு கிரியால் உன்னை ரக்ஷிக்கும் சாதனையும் முக்கியமல்ல இறைவா என்ற நாமமே முக்கியம்.

நான் பிழைத்துக் கொண்டேன். இந்த கொடியைப் பற்றி மேலே சென்று நான் பிழைத்துக் கொள்வேன் என சொல்லிக் கொண்டே மேலே ஏறினான் அம்மனிதன். அவனால் ஏற முடியவில்லை. திகைத்தான். உடனே அலறினான்.

கடவுள் என ஒருவன் இருந்தால் அவன் என்னை காப்பாற்றட்டும் என அலறினான்.

ஓர் அசரீரி ஒலித்தது:— நீதான் கடவுளை நம்ப மறுக்கிறயே கொழந்தே. யான் உன்னை எப்படி காப்பாற்ற முடியும்?

மனிதன்:— அவஸ்யம் நான் உன்னை நம்புகிறேன். என்னைக் காப்பாற்று.



தூடிணங்கி

(49)

உன் அறியாமை
ஆகும் பூஷணம்
உன் மனை உருக்கும் ஏக்கம்
ஆகும். அறியாமைக்கு
மறத்தலும், மனிதத்துவமாகும்.
மன உருக்க ஏக்கம் கண்டு திருவடி உண்டு.

அசரீரி :- உன்னை காப்பாற்றினாலும் நீ என்னை நம்பமாட்டாய். உன்னை காப்பாற்றிவிட்டாலும் நீ என்னை நம்பமாட்டாயே தெரிந்தே.

மனிதன் :- இல்லை இல்லை கட்டாயம் நம்புவேன்.

அசரீரி :- சரி சரி! உன் கையின் இருக்கையை விட்டுவிடு தெரிந்தே. → யாம் உன்னை காப்பாற்றுவோம்?

மனிதன் :- உடனே அவனின் நீ கடவுளா கூவினான். இரக்கமே இல்லாதவன். மகா துரோகி. காப்பாற்று என்று உன் கையை கொடுத்து காப்பாற்றுவதை விடுத்து விடுகிறாயே? பிடித்திருக்கும் கையையும் விடச்சொல்


நான்

நீ ஓர் மோசக்காரன். உன்னை நம்பி பிறயோஜனம் இல்லை.



முருகா! விநயகா! (50)
ராமா! கிருஷ்ணா
என்று நாம ரூப முர்ரா
ஓர் இறைவனை கூவி அழைத்தாலும் ஓ தேவனே நீ
ஜீவ வடிவத்தில்
அவஸ்யம் ரக்ஷிக்கப் படுவாய். இது ஸத்தியம்.

நானே! என் பவத்தால்
ஏறிக் கொள்கிறேன்
என சொல்லிக் கொண்டே, மேலே ஏறுமுயற்சி செய்தான்
மேலே எவ்வளவு தூரம் ஏற வேண்டுமென்று அம்மனிதன்.
அண்ணாந்து மேலே பார்த்தான். மேலே ஓர் எலி!
அக்கொடியை கடித்துக் கொண்டிருப்பதைக்
கண்டான். ஐயோ! ஐய்யோ கடவுளே!
என அலறினான்.
அக்காட்டுக்கொடியும் அறுந்தது. அம்மனிதன்
மேலும் கிடுகிடு பள்ளத்தில் வீழ்ந்து கொண்டே
அலறினான்.
கடவுள் என ஒருவன் இருந்தால்;
என்னைக் காப்பாற்றட்டும் என அலறினான்.




கடவுள் கிருபையினால் ஓர்பாறையில் விழுந்து
சிதறி சாக வேண்டியவன் சருகுகள்
சேர்ந்து ஓர்குவியலாக இருக்கும் மேட்டில்
விழுந்து சிராய்ப்பு காயம் எதுவுமில்லாமல்
மெத்தையில் விழுந்தவன்போல் உயிர்தப்பினான்.
பின் அம்மனிதன் வார்த்தை:— என்ன சாக
டிக்கப்பார்த்தானே "கடவுள்".
நான் பிழைத்துக் கொண்டேன்.
கடவுளை நம்பாதே அவன் ஒரு மோசக்காரன்
என வார்த்தைக்கு வார்த்தை கடவுள்! கடவுள்!
என்று திட்டிக் கொண்டு
ஊர் வந்து சேர்ந்தான்.




தூஷணையும்
பூஷணையும்
நம் இறைவனுக்கு ஒன்றே
மேலும் பூஷணைத்தை விட
தூஷணைத்தை வெகுவாக
சுவைத்து அனுபவிப்பான். அருள்பாலிப்பான்.

அம்மனிதனுடைய தூஷணம் எப்படி இருந்தது
விவாம்
என்றால் :- **கடவுள்** என்று சொல்வதே
பைத்தியக் காரத்தனம். கடவுள் என்பது
மூட நம்பிக்கை. கடவுள் என்பது ஒருவனை
ஒருவன் ஏமாற்றும் வேலை. கடவுளை எண்ணுவது
வேலையில்லாத சோம்பேறிகளின் வேலை.
கடவுள் என ஒருவன் இருந்தால் கொலை
கொள்ளை! வறுமை! பிணி! அகாலமரணம்
விபத்து! அப்பாவிகள் துன்பம் அடைவது!
இயற்கையின் சீற்றத்தால் பல ஆயிரக்
கணக்கானோர் பலி! அசம்பாவிதமான செயல்கள்
நடக்க முடியுமா? கடவுள் தான் நடக்க விடுவானா?

**கடவுளை** நம்புகிறவன் **முட்டாள்**

என வார்த்தைக்கு வார்த்தை கடவுள் கடவுளானை
புலம்பித் தொண்டை வறண்டு
சோர்ந்தான்.



53

அவன் ஊரில் ஓர் சாலி வழியே நடந்து செல்லும் போது, எதிரே லாரி ஒன்று வந்தது. அதை முந்திக் கொண்டு ஓர் பைக் வந்தது. பைக்கில் இருந்தவன் வெகு வேகமாக வந்தான். லாரியை முந்தி வேகமாக வந்த தன்மையால் ஓரமாக சென்ற அம்மனிதன் சமீபமாக வந்துவிட்டான்.

இம்மனிதனோ, என்ன சொன்னான் என்றால்? "எனக்கு 40 வயதுதான். 100 வயதுவரை நான் இருப்பேன்"

"நான் தைரியசாலி. அதிபலமானவன். ஒரே தாவாக தாவி பிளாட்பாரம் சென்றுவிடுவேன்."

"என்னைத் மோத பைக்கோ? லாரியோ?? முடியாது." என கூறிக்கொண்டே எகிறி குதித்தான், பிளாட்பாரத்தை நோக்கி. ஓர் வாழைப்பழத் தோல் இவனுக்காக காத்திருந்தது போலும்?



கடவுளே என

ஸர்...... என வாழைப்பழத்தோல் வழுக்கிச் சென்றது.

விதி வசத்தால் ஐயோ! ஐயய்யோ!

அலறியபடி குப்புற விழுந்தான் அம்மனிதன்.

அவனுக்காகவே ஓர் எல்லைக்கல் (மைல்கல்) காத்திருந்தது போலும்

அம் மைல் கல்லில் பலம் கொண்ட மட்டும்

டமால் என மோதினான். மூக்கு உடைந்து

பிராணன் பிரிந்தது. அம்மனிதன் இறந்தான்.

அந்நாஸ்திகன் நரகம் செல்லவில்லை!!!

மாறாக சொர்க்கம் சென்றான். ஆச்சரியமாக இருக்கிறதா?


சொர்க்கத்தில் பேசிக் கொண்டார்கள்.

கடவுளை சொல்லிச் சொல்லி, திட்டினான்.

அவர்கள் வார்த்தை: தூஷண வார்த்தை மன்னிக்கப்பட்டது. மறக்கப்பட்டது.


அது அறியாமையின் குரல். கடவுள் என்ற வைத்திய வாக்கு அவனுக்கு சொர்க்கத்தைக் கொடுத்து விட்டது.

# இறை நம்பிக்கை



55

ஒரு நாஸ்திகன் கடவுள் இல்லெ. கடவுள் இல்லெ.
கடவுள் இல்லவே இல்லெ என சொல்லித்திரிவான்.
மற்றொரு நாஸ்திகன் இறைவன் ஒழிகெ. இறைவன்
ஒழிகெ. இறைவன் ஒழிக என சொல்லித்திரிவான்.
இவ்விருவருமே வாழ்க்கை முழுவதும் மேலே
கண்டவாறு சொல்லித்திரிவர். ஓர் நாள்
நாவ குதியினில் அவ்விருவருமே மரணமெய்தினர்.
இருவருமே சொர்க்கம் சேர்ந்தனர்.
ப்ரியகவான் வாக்கியம் :- கடவுள் என்றும்,
இறைவன் என்றும் ஒவ்வொரு வாக்கிலும்
மாறிமாறி வந்தது ஸத்திய வாக்காகும்.
ஆ ஐ ஸ?



காய்ந்த ஓலை :- 56

ஜாதிண

பழி பாப வாக்குகள்
எனும் காய்ந்த ஓலை
விழப் போகும் நேரம் மரத்தில்
தொங்கிக் கொண்டே நான் செத்து
விழப் போகிறவருக்கும். என்கிறது
யாரும் கேட்க வேண்டாம்.

இல்லை என்றும், ஒழிக என்றும், வந்த வாக்கு,

**வாக்கு** அல்ல. அது ஓர் **காய்ந்த ஓலை**யின் சப்தமாகும். ஓசையாகும்.

இது "**அறியாமை**"யின் குரலாகும்.

அது மறக்கப்பட்டது. மன்னிக்கப்பட்டது. மறைந்து விட்டது.

இறைவா! கடவுளே! தெய்வமே! பகவானே! என்ற

வாக்கு **இறை**யின் **சத்திய** வாக்காகும்.

இச்சத்திய வாக்குக்கு புனிதப் பிறவி அல்லது சொர்க்கம்
நிச்சயமாக உண்டு எனை இதை நிறைவு செய்கிறேன்.
இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே.

**பாபா**



அது என்னுடைய (57)

அறியாமையின் குரல்.

என் வார்த்தைகளை மனதில் எடுக்க வேண்டாம் அவைகளை மறந்துவிடுங்கள். மன்னித்துவிடுங்கள் என கூறுவதாலே


நாமாவின் ரகசியம்!

(1) வைதீகம் :- அப்பா! அம்மா! ஐயா! ஐயனே! அன்னையே! பிதாவே! மாதாவே என "குரல்" கொடுத்து கூப்பிடுவதோ அல்லது நினைப்பதோ அல்லது "அவரை அழைத்தாலும்"!

"அது வைதீக தர்மமாகும். அது ஒழுக்கம் & கட்டுப்பாடு பக்தியின் "அடிப்படையாகும்" அதனால் பக்தி மேலும் மேலும் வளரும். அது இட்டுச் செல்வது சொர்க்கம் வரையில் தான் என உணர்க. காரணம் "சொந்த, பந்த, பாசப் பற்று" கன்னிக் குரல் என உணர்க.

தெய்வீகத்தின் வழிகாட்டியின் நாமா! ஆகும்.

சாதனையின் மேல் நோக்கி செல்லும் போது அவைகளை விட்டே மறந்தே ஆக வேண்டும்.



லௌகீகத்தில் கூறும் நாமாக்கள் குடும்பஸ்தர்கள் குடும்பத்தில் உள்ளவர்களை அழைக்கலாம். ஆனால் உன்னுடைய ஸத்குருவை அந்த நாமங்களால் அழைக்காதே என்றும் அவை பந்த பாச பந்தின் நாமா என்றும் உணர்க. உன் குருதேவரை குருதேவா! குருநாதா என அழைப்பாயாக. அதுதான் சாதனையில் மேல் சோதனை ஆகும்.


ஐ தெய்வீகம் :- கடவுளே / இறைவா / பகவானே / தெய்வமே ! ஸ்வாமியே ! ஆண்டவா / என அழைத்தாலும் ! உருகி வேண்டினாலும் !

"இயற்கையின்" நிலையால்; (அனேக உபகாரம் பெறலாம். முன் கூறிய

"7 தெய்வங்களின்"! எந்த நாமாவை சொல்லி அழைத்தாலும், உருகி வேண்டினாலும் !

"ஜீவ ஸ்வரூபங்களில்" ஏதேனும் ஓர் வடிவில் அப்போதைக்கப்போது தோன்றி இடர் களையும்.

அதன்பலன் :- "பத முக்தி ஆகும்" என உணர்க.



ஓ பரமார்த்திகம்:– "குருதேவா"!

"குருநாதா"! என அழைத்தாலும்;

உருகி வேண்டினாலும்; "மனம்"!

பக்குவமாகும். பின் பக்குவப்படுத்திக் கொண்டு;

தாவக்கிரமத்தில் மனதை அழிக்கும்

நாமாவாகும்.

உன் வசதியம் கண்டு; "ஜீவ முக்தியா"?

"பரமுக்தியா"? "நீ" கண்டு" அறிநம்.

யுவர் சாயிஸ். நாமாஆகும்.

குரு பாபா.

இருப்பது ஒன்றே. நடப்பது நலமே.



# லௌகீகம்!

லௌகீகம் என்பது நாமரூபம் சம்பந்தம்
கொண்டது. அதனால் குணதோஷம்
பின்னலிடும். உறவு, சுற்றம், நட்பு,
இவைகளுடன் கொட்டமடித்து
கொண்டாடும். தொழில் என ஒன்றை
சொல்லிக்கொண்டு கஷ்ட நஷ்ட
(நான் தானேயாக்கிறேனென்கே. எனவே தானே ஓடியும்) என்றும்
மென்றும்; பாப நஷ்டமென்றும்;
தீராத மனநோயை கொண்டதாகும்.

குற்றம் குறை & பழிபாபம் இவைகள்
சூழ, எந்த விறுடியும் சலிப்படைவதாகும்.
நிம்மதி! அமைதி! சாந்தி இல்லாததாகும்.




காமம்:— பெண் & பொன் பொருளில் தீராத மயக்கம். (61)

வெகுளி:— சம்பந்தம் இல்லாமலும். விபரம் தெரியாமலும்; விஷயங்களில் சிக்குதல்.

மயக்கம்:— நாமரூபம்! உறவு சுற்றம்! இவைகளில் இனம் அறியாத ஓர் மயக்க சூழ்ச்சி இணைந்திருக்கும்.

கொடுக்கல், வாங்கல் & போக்குவரவிலும்;
வினைப் பெருக்கம். மண்/பொன்/பெண்/
என்ற மூவாசையின் சூழ்ச்சி. காமம் &
வெகுளி & மயக்கத்தின் தடாலடி.
(ஆசை & அவஸ்தை & அயர்வு சோர்வு)
ஆணவம்/கன்மம்/மாயையின் (மும்
மலத்தின் புதைசேற்றுக் குழி.
ஸத்வம்/ரஜஸ்/தமோ/என்ற முக்குணத்தின்
அடாவடித்தனம். சஞ்சிதம்/
பிராரப்தம்/ ஆகாமியம்/ என்ற மூவினையின்
முடிச்சுடன் கூடிய பின்னல்கள்.





முற்கவனத்தால் வினையும்
போட்டி பொறாமை போராட்டம்
பணிவு & பொறுமை என்ற கல்வியை
கற்காமல், படிப்பு என ஒன்றை படித்துவிட்டு
அறிவு சோம்பலினாலும், இயலாமை எனும் சொல்லினாலும்
அதனால் வரும் பட்டம் / பதவி / கௌரவம் /
அந்தஸ்து / புகழ் / கீர்த்தி / இவைகளின்
ஆதிக்க அதிகாரம் என்னும் மரணவலி /
செல்வம், செல்வம்; செல்வம் / செல்வோம் /
என்ற மரணபடுகுழி விளக்கமாகும்.



உ

63

மாற்றுண் பொருளென ஸ்ரீபகவான் பொருள் ஜீன

என்றுடையது என பாராட்டியும்.

அவன் செயலே என்செயல் என ஏற்றுக்கொண்டும்

ஊசி நாட்ட இடமில்லாமல் எங்கும் நிறை

ஸ்ரீபகவான் ஸத்தியமாய் உணராமல் மறந்தி

நான் நான் நான் எனும் மார் தட்டிக்கொண்டு

அஹங்கார மமகாரத்தோடு

அழிவுப் பாதையில் செல்வதுவென நித்தம் என


ஸ்ரீமஹான்கள் கூறுவர்.



# உ தெய்வீகம்

அழிவுபாதையில் செல்லாமல்,

முன்கூறிய லௌகீகத்தை,
தெய்வீகத்தோடு இணைத்தால்;
அதுவும் தெய்வீகமாகிவிடும்.
எப்படி என்றால்?
இறைவன் ஒருவன் உண்டு என்றும்;
அவனாலேயே இவ்வுலகம் உண்டாயிற்று
என்றும்; ஈ, எறும்பு (பூச்சி) முதல் யானை வரை ஈறும்
அவனுடைய குழந்தைகள் என்றும்;
ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க
வேண்டுமென்றும்;
அப்படி விட்டுக்கொடுத்தால் மனசிரமம் (உடல் உபாதை)
நீங்கும் என்றும்; அங்கு லௌகீகம்
நாசமாகி தெய்வீகம் பிரகாசிக்கும் என்றும்;
ஸ்ரீ மஹான்கள் சொல்வர். மேலும் தெய்வீகம்
எது என அறிவூன்றி விசாரித்தால்,





எல்லாம் ஒருவனே என்றும்

" ஒருவன் பொருளே "

" " செயலே "

அவனன்றி அணுவும் அசையாது "


மேலே சொன்னது

இந்த 4 ஐயும் / நான்கு வேதமாக

திட உறுதி நம்பிக்கையின்

வைராக்கியமான சாதனையே வாழ்க்கையாகவும்

வாழ்க்கையே சாதனையாகவும்



ஒருபக்குவ ஆன்மா ஏற்றுக் கொள்
வானெயின்; இது தான் தெய்வீகம் என்பதும்.
அவன் அவஸ்யம்!
“ஸ்ரீபகவான்” (அவன் உபாசனாமூர்த்தியை)

“நிதர்ஸனமாக”!

இங்கேயே! இப்போதே தரிஸிப்பான். இது

ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!
தெய்வீகம் என்னும் பக்தியானது ஜப தப,
பூஜை புனஸ்கார, அபிஷேக ஆராதனை
ஆரத்தி முதலிய ஷோடஸ உபசாரங்கள்
காமியமாக செய்தால் அது வியாபாரம் ஆகும் பக்தி அல்ல. அல்ல.



67

உலகப்பொருள்களோ? சொந்தபந்த
உறவுகளோ? நாமரூப எந்த பொருள்களோ;
இவைகளை வேண்டாமல் நீ வேண்டுமென
உன்திருவை வேண்டுமெனவும்
கண்ணீர் விட்டுகதறி அழுது முறையிட்டு;
அவனை தரிசிப்பதே தெய்வீகம் என்னும்
பக்தியாகும். பிறந்தபிறவியே/நாமரூப
உலகை போதும் என நிறைவுகொள்தலும்
அவனோடு உறையாடி, உறவாடி அவனோடு
கலந்து, கரைந்து, நீயும் யாமும் (ஒரே) கனிகளாக
நடு இருப்பதே சுவைகாண்/ என்ற நிலையை
பெறுவதோடு நின்றுவிடாதே. பரமார்த்தீகத்தோடு
இணைத்துவிடு.



மனித இனமும் மற்றும் ஜீவ இனங்களும், தாவரங்களும் இருந்தால் மட்டும் அது பூமி ஆகும். பாறைகளும் மணல்களும் மட்டும் இருந்தால் அவை கோள்கள் எனப் படும் என அறிக.

# பரமார்த்தம்!

இவ்வுலகமும், மனித இனம் உட்பட அனைத்து ஜீவ கோடிகளும், மற்றும் உள்ள கோடானு கோடி பூமிகள், கோள்கள், அண்ட ரண்ட பிரம்மாண்டங்கள், சூரிய சந்திராதிகள் எல்லாம், ஒட்டுமொத்தமாக;


"எதால் ஆனது?" என்றும்;

"எப்படி இருக்கிறது?";

அறிவு! என்று விசாரித்தால்?

மண்ணால் ஆனது என்பதில் வரும்,

காலாதீத பரப்பிரம்மத்தை எதுமில்லை என மகான்கள் அனுபவ ஞானத் தோடு விளக்குவதால்,



69

கோள்களை விட அளவில் மிகப்பெரிய கோள்களை மட்டுமே அண்டரண்ட பிரம்மாண்டங்களை ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம்.

மண் பரப்பிரும்மத்திற்கு உதாரணமாக உண்மையல்ல கொடுத்தார்கள் ஆதிஸ்ரீமஹான்கள்.


காரணம் :- மண் ஒன்றுதான் அன்றும், இன்றும், என்றென்றும், மனக் கண்ணால் காணக்கூடிய ஓர் வஸ்துவாக இருக்கிறது. மேலும் கோடானு கோடி நாமரூபங்கள் இந்த மண்ணிலே தோன்றினவும். எத்தனை தாவரஜங்கமங்கள் தோன்றினவும். 84 லக்ஷம் ஜீவ கோடிகளும் மனித இனமும் தோன்றினவும் இருந்தாலும், மறைந்தாலும்,



70

மண் :- ஜீவசொரூபமோ ஜடசொரூபமோ எதுவாயினும் தோன்றி, இருந்து விரியாடி மாறி மறைந்து மண்ணாகவே இருக்கிறது என்ற ஒரு இருப்பை வெளிப்படுகிறதென்று உணர்க.

மண் ஒன்றுதான் மாறாமல், மறையாமல், இருப்புடன் கூடி இருக்கிறதென்று ஸத்தியமாய் உணர வேண்டும். அதனால் தான், தற்காலிக விளக்கமாக மண்ணே! பிரம்மத்தின் அம்ஸமாக உதாரணமாக உண்மையில் கொள்ளவும். இந்த மனமானது, எதையும் நேருக்கு நேர் கண்ணால் கண்டாலும்; தம் காதால் ,, கேட்டாலும்; மட்டுமே உண்மையென நம்பும். காணாததையும் கேளாததையும் உண்மையென நம்ப மறுக்கும். நமக்கு எதிரிகளே கண்ணும் காதும் தான். கண்களுக்கும், காதுகளுக்கும், உலகில் காணும் எல்லாமே பிரம்ம மென்று!



போதிப்பதற்கும்; அதை சாதிப்பதற்கும்;

"மண்ணைத்தவிர" வேறெதுவும்


இல்லையென்பதே உண்மையாகும்.

முடிந்த முடிவாக, இந்த நாமரூப மயக்கம்

ஆவரண மயக்கமும், விக்ஷேப கலக்கமும்

முழுமையாக நாசமாக வேண்டுமானால்?

விதவிதமான நாமரூபத்தால் மனம் ஏமாறுவதும், பின் தடுமாறுவதும் இல்லாகிவிட்டதால் அதை நாமரூப மயக்கமென்றும்; அதனால் விளையும் இருமையால் சந்தேக கலக்க பயமுண்டாவதால்.



அதை விட்வேஷய கவக்க மென்றும், ஸ்ரீஞானிகள் சொல்லிவைத்தார்கள். இவ்விரண்டும்!

முழுமையாக நாசமாக வேண்டுமானால்?


## நாமரூபதோற்றமத்தும்

புதுமைகளாகவும்! பொம்மலாட்டமாகவும்!

நேருக்குநேர் காணவேண்டும். அப்படி காண்பதற்கு?

எல்லாம் ஒருவனே! ஒருவன்பொருளோ!! ஒருவன் செயலே! அவனன்றி அணுவும் அசையாது! என்ற

ஓர்மை வைராக்கியஸ்திரமாக வேண்டும்.






இந்த ஓர்மையான வைராக்கிய ஸ்திரத்தால்,
உலகம் எல்லாம் அவனுடைமையாகி விடும். நீயும்
அவனுடைமை (அவன் குழந்தை) ஆகி விடுவாய்.
அவனுக்கன்னியமாகவும் / பின் உனக்கன்னியமாகவும்!!

# எவரும் எவனும்?


(ஈசனும்) (மாயாவும்)

இருக்க முடியாது. இருக்கக் கூடாது. இருக்க இயலாது.
ஆகவே, இங்கு எல்லாம் **ஒருவனே** என்பது சத்தியமே.

இதனால் தோஷ குணங்கள் / பேத வேற்றுமைகள் /
ஆசையால் தோன்றிய தேவைகள் / அதாமியத்தால்
தோன்றும் சந்தேகம் / ஜீவர்களை பின்னலிட்டாட்டும்
மூவாசைகள் / உள் இருந்தியங்கும் முக்குணங்கள் / ஆகிய
நாம ரூப உலகமாக தோன்றும் மாயாசிமனதின் விளையாட்டுக்கள்
அனைத்தும் கட்டையில் வந்த கள்வன் போல மாயமாய்
மறைந்து விடும்.
இதுவே விசிஷ்டாத்வைதமாகும்.



எந்த வினாடி மேலே சொன்னவை போல்
மறைந்து உலகம் செயலற்றதாகி விட்டால்
இவ்வுலகம் சிற்பம் & சித்திரமாகி
மனம் & அறிவு கண்களால் கண்டு, உணரப்படும் என அறிக.
உணர்ச்சியற்ற இவ்வுணர்வு!
தோன்றி விட்டால் போதும், மனம் பண்படுத்தப்
பட்டு விட்டதென ஸத்தியமாய் அறியலாம்; உ
இங்கு? உணரலாம்; ஆனந்திக்கலாம்.
அகம் பிரம்மபாவனை அதுவே நாம்! நாமே அது!
ஆரம்பமாகும் என அறிக.
மனம் பண்படுத்தப்படாமல் அகம் பிரம்மபாவனை சாத்தியமாகாது.
மனம் பண்படுத்தப்படுவதற்கு சர்வார்ப்பணம் என்ற, விசிஷ்
டாத்வைதமாகிய எல்லாம் ஒருவனே!
என்ற ஓர்மை தேவை. மனம் ஓர்மைப்பட்டு விட்டால்,





எல்லாம் ஒன்றே என்ற அத்வைத பாவனை நிலையெனும்.
இது ஸ்ரீ குருதேவர் அருளும் அகம் பிரம்மாஸ்மியாக்
சாத்தியமாகும். அகம் பிரம்ம பாவனையும் முழுவதும் போது,
எண்ணமற்ற சுத்த சூன்யம் லயிதமாகும். இங்கும்

# யாம் அது / அதுவேயாம் /

# நாம் அல்ல; யாம் அது ஆகும்.


(நாம் இருமை) (யாம் ஒருமை)

# அகண்டான்ம பாவனை

ஆகிய ஓர் பாவனையை வைக்க வேண்டும். எண்ணமல்ல

# யாம் (யாமாகவே) இருக்கிறோம்

என்பது ஸ்திரமாகி நீ அதுவாகவே ஆகி விட்ட,



# மறைணம்?????


1. நாமரூப ஜகஜீவ (மனித இனம் உட்பட) தோற்றம் அனைத்தும் எந்தவிதராகத்துவேஷாதிக் ஏற்ற (விருப்பு வெறுப்பற்ற) ஆனந்தமயமாக தோற்றும்.
காரணம் :- ஸங்கல்ப விகல்ப (குற்ற கற்பனையின்) மனம் இராது. (தடையமின்றி மறைந்தாகும்)

2. நீ இது வரை சாதித்த சாதனைகள் அனைத்தும் மறந்து விடும். எப்போதுமே அதுவாயிருக்கும் ஆனந்தம் இயல்பாகும்.

3. எந்த ஜீவ தோற்றங்களிலும் இன, ஜன, மன வேற்றுமை தோற்றாது.

4. பதுமைகளும், பொம்மலாட்டமும் கூட தோற்றுமல், ஒளிமயமாகிய அகண்ட ஒளிமயமாகி விடும்.

5. முடிவாக எங்கும் அகண்டானந்த மயமாகி விடும்.
இதுவே பரிபூரண நிறைவாகும்.



உலக ஜீவர்களுக்கு
விட்டுக்கொடு.
உன்னை மட்டும் விட்டு விடாதே.


(1) உலகஜீவர்களுக்கு தொழிலிலும், குடும்பத்திலும், அனைத்து கர்மகாரியங்களிலும் விட்டுக் கொடு!

(2) உன்னை மட்டும் விட்டுவிடாதே!

(1) உலக ஜீவர்களுக்கு விட்டுக்கொடு:—

(A) பொருள் என்ற பணப்பற்று வரவிலும், உனக்கென அமைந்த தொழில் துறையிலும், கொஞ்சம் நீக்கு போக்கு விட்டுக் கொடுத்தல் வேண்டும். இதில் முரண் சாதித்தல் பிடிவாதம் வேண்டாம்.

பிடிவாதம் சாதித்தால் இருப்பதையும் இழக்க நேரிடும்.



78

உறவு, சுற்றம், நட்புகளிடையே
நதியைப் போல் வளைவு நெளிவு வேண்டும்.
முட்ட வேண்டாம்! மோத வேண்டாம்!!
இங்கு முழுமையாக (வார்த்தை
செயல்களில்) விலகவும் செய்யலாம் என உணர்க.

இப்படி விலகும் போது அடுத்தொரு நன்மை உனக்காக
காத்திருக்கிறதென உணர்வாயாக. A, B இவ்
விரண்டிலும் விட்டுக் கொடுக்கும் போது,
மனோ பாரமும்! உடல் சிரமமும்! அணு அணுவாக
குறைந்து குறைந்து நாசமாகும். முதலில் கஷ்டம்.
பின் வர வர ஆனந்தம் தொடரும். கொடுக்கிறது.

ஓ நாம ரூப மாற்றம் தானே உனக்கு ஏமாற்றத்தை
அது விரைவில் அவன் இயக்கமாக மாறும் போது,



எதையும் நீ விட்டுக்கொடுப்பதாக தோன்றுது.

"காலம் நேரம் கண்டு"

அவைகளாகவே விலகுவதை நீ உணர முடியும்.


இதைத்தான்

விட்டுக்கொடுத்தால் மட்டுமே விக்கினங்கள் மறையும் என்றார்கள் ஞானிகள்.

(இங்கு உன் சாதனையும் முற்றுப் பெறும்.)

உ "உன்னை மட்டும்" விட்டுவிடாதே.

Ⓐ நாம் நம்பும் உலகம் நாமும் நம்முடையதும் அல்ல



80

(B) நாமரூப உலகம் இறைவனுடையது.


அது "வினைவிதி" சம்பந்தம் கொண்டது.

நாமரூப பகவானுடைமையே!

(கண்ணுக் காணுந் தாவரமும், உலகமும் நாமரூபம் மறையும் வரை)

(C) ஸ்ரீ பகவானும் "தத்" (பதம்) யாமும் "த்வம்" (பதம்) பரசொரூபமும் "அஸி" (பதம்) அன்றும் இன்றும் என்பறான்றுமே.

"காலாந்தரமாகவே! இருக்கிறோம் என்ற



"அகண்டபரசொருப ஸ்திதியில்"!!!!!


அகண்டானந்த ஆழியில்

(அசைவற்றுஸ்திரமாக அமர்ந்தோம்.)
அசஞ்சலமாய் அமர்ந்தோம்!

"யாம்" என!

சும்மாவே சுகமாகவே இருப்பதுவே உன்னை

(உலகை விட்டுவிடாத நிலையாகும்.



82

"தன்னை அறிய தமக்கொரு கேடில்லை"!

என்ற நிலையில் தாம் தாமாகவே இருக்கும் நிலை

இதுவே அந்த நாமரூப ஜகத்தில் உன்னை விட்டு விடாத நீ

„ நான் எனதில் மயங்காமல் இருப்பதே „ •

காமக்குரோதாதி குணங்களில் சிக்காமல் „ „ •


வார்த்தைகளின் மாயாஜாலத்தில் மயக்கமற்று „ „ •

காட்சிகளில் எழுச்சி வீழ்ச்சி யற்றுசும்மா „ „ •

சொந்த பந்த பாசத்தில் உணர்ச்சியற்று, மெய் உணர்வுற்ற நிலையே „ •

இங்கு கட்டையில் கள்வன் வரவில்லை. கயிற்றில்
சர்ப்பம் வரவில்லை. சிப்பியில் வெள்ளி வரவில்லை என்ற
உறுதியில் சந்தேக களங்க கலக்க பயமற்ற நிலையே ; „ •

83



ஞானத்திற்காக எந்த உழைப்பும் உழைக்கவில்லை

எந்த பயிற்சியும் முயற்சியும் பண்ணவில்லை"

எந்தவிதையும் எம் இருப்பை

தவிர அதாவது யாம் யாமாகவே

இருக்கும் இருப்பைத் தவிர

எதுவும் இல்லையென்பதே ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

என்ற ஸ்வய அனுபவத்தை!

"விடாதநிலையே"! தன்னை (உலகில்) விடாத நிலையென்று

ஸ்ரீ மஹான்கள் சொல்ல கேட்டாய் பலமுறையே.



# கேள்வி பதில்

இம்முறை ஹரித்வார் சென்றிருந்த
சமயம்; ஹிமாலயாவிலிருந்து வந்த
ஓர் ஸ்ரீ மஹாத்மா, கேள்வி ஒன்றைக் கேட்டார்?
கேள்வி:- அன்பான பாபாஜீ! ஓர் சிறிய
விளக்கம் தேவை? அது இரு கேள்விகளாகும்.
(1) "அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம், அகமெல்லாம்,
ஜெகம் பரமும் ஜீவர்களும் சிறிதும் இல்லை,"
என்பதே வேதாந்த அத்வைதத்தின் உயிர் மூச்சு ஆகும்.
அந்த வேதாந்த அத்வைத ரகஸ்ய வாக்கியத்தை
உமது மெய்யன்பர்களின் திருவாக்கால் சொல்ல
வேண்டாம் என்று சொல்லி நிறுத்தி வைத்திருப்
பதின் காரணம் என்ன பாபா?
(2) சிவகாலமாகவே சுத்த அத்வைதியான உம்
"திருவாக்கில்" ஸ்ரீ பகவன் நாமா ஸ்பஷ்டமாகவே
ஒலிக்க அனைவரும் கேட்கின்றனர். ஓர் சுத்த அத்வைதியின்
வாக்கில் இப்படி "ஸ்ரீ பகவானின் நாமா" ஒலிக்க



85

இதுவரையாரும் கேட்டதில்லை. காரணம்:-

"ஜக, ஜீவ, பரமும்," (ஸ்ரீ) மித்தை!

எனஸத்தியமாகவே உணரப்பட்டுவிட்டால்;

பொய்யான ஸ்ரீபகவந் நாமாவை எப்படி ஒருவன் ஸ்மரிக்க முடியும்? எப்படி இயலும்?? ஆகவே இவ் விரு கேள்விகளுக்கும் விளக்கம் தேவையாயாஜீ?

பதில்:- முதலில் இதை "கலியுகம்!"

என்பதை உணரவேண்டும். மஹாத்மா! இரண்டாவது

எந்த சாதனையாளரும் நான் எனது! என்ற

அஹங்கார மமகாரத்தை விடாமல் வினைகளை!

புசிக்கின்றனர் என உணரவேண்டும். இங்கு

குழந்தாய்!.. ஸ்ரீபகவான் கேட்கிறான்:- "எம் சிருஷ்டியை"

எண்ணி எண்ணி! கேட்டுக் கேட்டு! பார்த்துப்பார்த்து!



விரும்பி விரும்பி சுவைக்கிறாயே??? தொடிந்து

அவைகளை கொடுத்த எம்மை!!!! ஒரே

ஒரு க்ஷணமேனும்! ஒருமுறையேனும்! ஒரு முறை! ஒரே ஒரு தடவையேனும்!

நினைத்ததுண்டா??? என அவன் கேட்கிறான்?

(யாம்) கொடுத்தவைகளை நினைக்கிறாய். கொடுத்தவனை மறந்துவிட்டாயே? இது என்ன நியாயம்? இது என்ன தர்மம் என்கிறான்.

இனி பதிலை கேளுங்கள்:— தாங்களும்! தாங்களைப் போன்ற ஸ்ரீமஹான்களும் அனுபவமாக கூறும் மஹாவாக்கியத்தில், இரண்டாவது வரியில் காணப்படும் வாக்கியத்தில்

87



இரண்டாவதாக வரும் வார்த்தையாகிய பரமம்!

ஏதைக் குறிக்கிறது? எவரைக் குறிக்கிறது? மஹாத்மா?

ஸ்ரீமஹாத்மா:- “சந்நிதியாகிய ஸ்ரீபகவானைக்” குறிக்கிறது பாபா.

வைத்தியம்:- அப்படியானால் ஸ்ரீபகவானுடைய படைப்பாகிய, உலகையும், உலகப்பொருள்களையும்,

நான்எனதுடன் அஹங்கார மமகாரத்துடன்

புசித்துக்கொண்டு அவைகளைப்படைத்த ஸ்ரீபகவானை மறப்பதும், அவரை இல்லையென மறுப்பதும்

என்னவகையில் நியாயம்? அதுஎன்னதர்மம் மஹாத்மா?




88

அம்மஹாத்மா தம் தலைவணங்கி நமஸ்காரம் செய்தார். எவ்வளவு பெரிய உண்மை இதில் அடங்கி இருக்கிறது பாபா? ஹே அன்பான பாபா! இதை நம் ஆதி ஸ்ரீ மஹான்கள் வாயிலாக தாங்கள் கிரஹித்தது எவ்விதம்? அதையும் சற்று விளக்கமுடன் தெளிவு படுத்திடல் நல்லது பாபா?

வைத்தியம் :— சற்று ஆழ்ந்த கருத்துடன் கவனிக்கவும்.

(A) சுத்த அத்வைதியான ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதாள்! அத்வைதத்தை ஸ்தாபித்தார். அது அவர் காலத்தில் ஏற்புடையதாக இருந்தது. பின்

(B) கலியுகத்தின் சுழற்சி சற்று வேகமானது. அப்போது தோன்றிய ஸ்ரீமஹான் ஸ்ரீ மத்ராமானுஜர் ஆகும். அவர் விசிஷ்டாத்வைதமாகிய கடும் சாதனையால் பக்தனும்! ஸ்ரீபகவானும்! சமமாக முடியும் என



89

"போதித்தார்"! அது அந்த நேரம் ஏற்புடையதாக இருந்தது.

இ கலியுகத்தின் சுழற்சி! மேலும் அதிவேகமானது.

அப்போது தோன்றிய ஸ்ரீமஹாத்மா ஸ்ரீமத் மத்வாச்சாரியார்! தாம் உணர்ந்த த்வைதத்தால்,

என்றென்றும்

"பக்தன் பக்தன்தான்!" "ஸ்ரீபகவான் ஸ்ரீபகவான்தான்"

"ஒரு பக்தன்! ஸ்ரீபகவானாக முடியாது."

என "சாதித்தார்"!!!

இவர்கள் மூவரும் கூறும் மூன்றுமார்க்கமும்

"காலத்தால்" பேதம் தெரிகிறதே யன்றி?



சாதனை என்பது:-

90


துவைதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். பின் உன் சாதனையால் துவைதத்தை விஸிஷ்டாத்வைதமாக மாற்றி உணர வேண்டும். பின் உன் சாதனையால் விஸிஷ்டாத்வைதத்தை அத்வைதமாக சாதித்து உணர வேண்டும்.

"சாதனையால் ஒன்று" படும். என உணர்க.

ஆனால்! காலத்தால் மாறி அமைந்த இந்த வேத வேதாந்த ரகஸ்யமான அத்வைதம்! விஸிஷ்டாத்வைதம்! துவைதமாக மாறியதை! துவைதத்தை நம் சாதனையால் விஸிஷ்டாத்வைதமாகவும்! பின் விஸிஷ்டாத்வைதத்தை! அத்வைதமாகவும்! மாற்றி அமைக்க வேணுமென்று உணர்வால் உணர்க.

அவஸ்ய குறிப்பு:- துவைதத்திலிருந்து, விஸிஷ்டாத்வைதமாகவும்! விஸிஷ்டாத்வைதத்திலிருந்து "தான்"! அத்வைதமாக வேணுமென்று அறிக.

துவைதத்திலிருந்து நேராக அத்வைதமாக மாற்ற



91

"கூடாதென்றும் முடியாதென்றும்! இயலாதென்றும்!"

அதன் காரணம் இது கலியுகத்தின் உச்சகட்டமென்றும்

அனுபவ அறிவால் உணர்க. படிப்பறிவாலல்ல.


ஸ்ரீமஹாத்மா :- இதனை எங்களுக்கு கூறும்

அறிவுரை என்னையாபா?

வைத்தியம் :- "அனுபவ அறிவு"! ஒன மெற்றவ

ஜகம் பரமும் ஜீவர்களும் சிறிதும் இலையென

சொல்லலாம். அதாவது Ⓐ "நான் எனது நசித்தலும்!



92

(8) நாமரூபத்தில் சந்தேகங்களுக்கு கவக்க பயமற்றவனும் அம்மஹாவாக்கிய வரிமை சொல்லவாம் எனஅறிக. அவன்படைப்பை புசித்துக்கொண்டு அவனை இல்லையென சொல்வது மஹா அபசாரமாகும் அனுபவம் தோன்றவே தோன்றாது.

(9) கேள்வி:- சிவகாவ்யமாகவே சுத்தஅத்வைதியான உம் திருவாக்கில் ஸ்ரீபகவந்நாமஸ்பஷ்டமாகவே ஒலிக்க அன்பர்கள் அனைவரும் கேட்கின்றனர். ஓர் அத்வைதியின் வாக்கில் இப்படி ஸ்ரீபகவந்நாமா ஒலிக்க இதுவரை யாரும் கேட்டதில்லை.

காரணம்:- ஐக ஜீவ பரமும் (முழு) மித்தை யென்று ஸத்தியமாக உணரப்பட்டு விட்டால்; பொய்யானஸ்ரீபகவந் நாமா நை எப்படி ஒருவன் ஸ்மரிக்க முடியும்? எப்படி இயலும்???



**கண்டுணர்தல் :- 93**

வெளித் தோற்றத்தில் நாம ரூப ஜக ஜீவ தோற்றத்தை மனக்கண்ணால் மண்ணாகக் காணவேண்டும். எல்லாவற்றையும் அறிவுக்கண்ணால் பரிபூரண சைதன்யமென்று உணரவேண்டும்.

வைத்தியம் :- ஒரு சிறிய கேள்வி மஹாத்மா? கள்? ஈசனாகிய ஸ்ரீ பகவானை, எப்படி கண்டுணர்கிறீர்

ஸ்ரீமஹாத்மா :- மாயாவை உடையவனே ஸ்ரீ பகவான். ஆகவே அவனை மாயாவி என கண்டுணர்கிறோம் பாபா.

வைத்தியம் :- அவன் மாயாவி என்றால் அவன் இருப்பு என்ன? அவன் இயக்கம் என்ன மஹாத்மா?

ஸ்ரீமஹாத்மா :- இருப்பு என்றால் சுத்தசைதன்யம் என்றும்; இயக்கம் என்றால் மாயாவுடையது பாபா.

வைத்தியம் :- அப்படியானால் இல்லை இல்லை, இல்லை இல்லை, ஆனால் அகண்டப் பேரொளியாய், அகண்டானந்தமாய், இருப்பை மட்டுமே உடையது என்றும் உண்டு என்று, ஸ்ரீ மஹான்களின் அனுபவவாக்காகக் கூறும்.



இப்படி இருந்
களிலும், காண்
பதிலும் உணர்
வதிலும் எவ்வாறும் 94

ஒன்றே என உணர்
வதே கண்டுணர்தவாகும் என அறிக.

நாவாதீத "பரந்தோடு" ஸ்ரீ பகவான் என்று

பூரண
ஸைதன்யத்தை, சேர்த்துக்கொள்ளுங்கள்.

கூடிய
தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவோடு,

"மாயை" முழுமித்தையென்று
தள்ளி விடுங்களேன்.

வையும்,
உபாதி பேதத்தால் பேதம் உண்டான ஸ்ரீ பரமாத்மா


ஈசன் என்ற ஸ்ரீ பகவானையும், ஜீவாத்மாவையும்,

ஒன்றாக்கி விடுங்கள் மஹாத்மா!!!

நீயும் ஸ்ரீ பகவானும் நாமும் என்றென்றும் ஒன்று தானே

மஹாத்மா?? இதை மட்டும் மறக்க வேண்டாம். அது

அறியாமையின் ஜீவதைக் ?



95

## நாம் (மனிதனுடைய வகை) இருந்த போது அதாவது?

அவன் தாயாகவும், நாம் அவன் குழந்தையாகவும் இருந்த போது, அவனுடைய மாயாவினால் நம் மனதால் விளைந்த கர்ம வினைகளை (வினை விதியை) நாம் அனுபவிக்க எந்தன் பேருபகாரம் செய்தான் என்பதை மனம் உள்ளவரை, மறக்க முடியுமா மஹாத்மா?

சாதனை செய்யாத சாமானியர்கள் மாயா வசம் அகப்பட்ட தன்மையினால் உலகப் புசிப்புக்கு அவர்களே காரணமானார்கள். சாதனை செய்த நாம், நம் வினை விதி எப்படி இருந்தாலும் நீயே கதியென அவனை சரண் புகுந்த

தன்மையினால் எந்த அளவுக்கு கர்மாவின் கடுமைக் கொடுமைகளிலிருந்து நமக்கு பேருபகாரம் செய்திருக்கிறான் மஹாத்மா? அதை மனம் உள்ளவரை மறக்க முடியுமா மஹாத்மா? அவன் மாயாவை உடைய மாயாவியாகவே இருக்கட்டுமே. அவன் மாயா! அவ்வளவே மஹாத்மா? அவனும் நாமும் ஒன்றுதானே மஹாத்மா?


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!